# நீ கர்த்தருடைய கையில் அலங்காரமான கிரீடமும், நீ உன் கர்த்தருடைய கையில் தேவனுடைய கரத்தில் அலங்காரமான கிரீடமும் ராஜமுடியுமாயிருப்பாய். ஏசாயா 62 : 3

என் அன்பு சகோதரியே, சகோதரனே

நீங்கள் கர்த்தருடைய கரத்தில் அலங்காரமான கிரீடமும், ராஜமுடியுமாய் இருக்க கர்த்தர் கிருபை புரிய வாழ்த்துகிறேன்.

**கர்த்தருடைய கரத்தில் –** ஆம், இது மிக முக்கியமான வார்த்தையாகும்.

**2 ராஜாக்கள் 3:15,16,17 :** சுரமண்டல வாத்தியக்காரன் வந்து வாசித்தபோது, கர்த்தருடைய கரம்(எலிசா) மேல் இறங்கி, அவன் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்,

இந்தப் பள்ளத்தாக்கிலே எங்கும் வாய்க்கால்களை வெட்டுங்கள். நீங்கள் காற்றையும் காணமாட்டீர்கள். மழையையும் காணமாட்டீர்கள். ஆனாலும் நீங்களும் உங்கள் ஆடுமாடுகளும் உங்கள் மிருக ஜீவன்களும் குடிக்கும்படிக்கு இந்தப் பள்ளத்தாக்கு தண்ணீரால் நிரப்பப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

**இது கர்த்தரின் பார்வைக்கு அற்ப காரியம்.**

எவ்வளவு அருமையான வார்த்தைகள். கர்த்தருடைய கரம் எலிசாவின் மேல் வந்து இறங்குகின்றது. உடனே கர்த்தரின் வார்த்தை வருகிறது.

எனக்கன்பானவர்களே கர்த்தருடைய கரம் உங்கள் மேல் வந்து இறங்கும்படியாக தேவனைத் துதியுங்கள்.

**சங்கீதம் 150 : 3–5** எக்காள தொனியோடே அவரைத் துதியுங்கள் வீணையோடும் சுரமண்டலத்தோடும் அவரைத் துதியுங்கள் தம்புரோடும், நடனத்தோடும் அவரைத் துதியுங்கள். யாழோடும் தீங்குழலோடும் அவரைத் துதியுங்கள் ஓசையுள்ள கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள் பேரோசையுள்ள கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள், சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக. ஆமென்.

**ஆம், துதியுங்கள் சங்கீதம் 136:2,3 கூறுகிறது.**

தேவாதி தேவனைத் துதியுங்கள். அவர் கிருபை என்றுமுள்ளது. கர்த்தாதி கர்த்தரைத் துதியுங்கள்.

பிரியமானவர்களே,

தேவனைத் துதிக்கும்பொழுது, கர்த்தருடைய கரம் நம்மேல் வந்து இறங்குகிறது. கர்த்தருடைய கரம் நம் மேல் வந்து இறங்கும் பொழுது, கர்த்தருடைய வார்த்தை நமக்குள் வந்து இறங்குறது.

**வாக்குத்தத்தம் வெளிப்படுகிறது**

**அலங்காரமான கிரீடம் – ராஜமுடி**

**பள்ளத்தாக்கு தண்ணீரால் நிரப்பப்படும். ஆமென்!**

எங்கு பார்த்தாலும் வாசல் அடைபட்டிருக்கிறதே என்று அலைமோதும் என் அன்பு சகோதரனே, சகோதரியே,

நீ கர்த்தருடைய கரத்தில் அலங்காரமான கிரீடமாகவும் ராஜமுடியுமாய் இருப்பதால், நீ காற்றையும் காணமாட்டாய், மழையையும் காணமாட்டாய். ஆனாலும் விசுவாசத்தோடே, எங்கும் வாய்க்கால்களை வெட்டு; பள்ளத்தாக்கு தண்ணீரால் நிரப்பப்படும். **விசுவாசத்தோடே பாடுவோவோமா ?**

அழுகை நிறைந்த பள்ளத்தாக்குகளை அரும் நீரூற்றாய் மாற்றினாரே இந்த தேவன் என்றென்றுமுள்ள சதாகாலமும் நமது தேவன் மரண பரியந்தம் நம்மை நடத்திடுவார் **ஆம் – மரணபரியந்தம் உன்னை நடத்துவார்.**

கர்த்தருடைய கரம் உன்மேல் இறங்கும்படியாக தேவனைத் துதிப்பாயா ? பிள்ளைகளுக்கு படிக்க இடம் கிடைக்கவில்லையே என கதறுகிறீர்களா ? அறியாத, புரியாத, நினைக்காத, எதிர்பாராத வாசல் திறக்கும். வேலையைப் பற்றியுள்ள பிரச்சனையா ? துவளவேண்டாம். **பள்ளத்தாக்கு தண்ணீரால் நிரப்பப்படும்.**

எந்த பிரச்சனையாகவும் இருக்கட்டுமே ?பள்ளத்தாக்கு தண்ணீரால் நிரப்பப்படும்.

இந்த மாதம் கீழ்கண்டவாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கையிடுங்கள்.

**நான் கர்த்தருடைய கையில் அலங்காரமான கிரீடடும்**

**என் தேவனுடைய கரத்தில் ராஜமுடியுமாயிருப்பேன்.**

**என் வாழ்க்கையிலுள்ள பள்ளத்தாக்குகள் தண்ணீரால் நிரப்பப்படும். ஆமென்.**